மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
மூன்றாம் தவணை - 2025

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவம் Christianity | Three Hours / Gr -11 | 15 | T | I,II |

கவனிக்க

(1) எல்லா வினாக்களுக்கும் விடைஎழுதுக.

(2) 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4)என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

## பகுதி I

**1.** இயேசுவின் பிறப்பு முக்கியமானதாக கருதப்பட்டதன் நோக்கம்

1. எதிர்பார்க்கப்பட்டவாறு நடந்தவையாகும்
2. மக்களின் முன் நடந்தவையாகும்
3. வரும் காலத்திற்கு முன்னர் இடம் பெற்றவையாகும்
4. இறைவாக்கு நிறைவு பெற்றமையாகும்

2. இயேசு பொதுத் திருப்பணி ஆரம்பித்த இடம்

1. சமாரியா 2. எகிப்து 3. கலிலேயா 4. எருசலேம்

3. இன,மத குல வேறுபாட்டைக் கருதாது தேவைகளின் மத்தியில் இருக்கும் ஒருவருக்கு உதவுதல்பற்றி குறிப்பிடும் உவமை

1. பரிசேயனும் வரி தண்டுபவனும்
2. நல்ல சமாரியன்
3. காணாமல் போன மகன்
4. காணாமல் போன ஆடு

4. “காரிருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் கண்டனர்.” இவ்வாறு உரைத்த இறைவாக்கினர் யார்?

1. எசாயா 2. மீக்கா 3. மலாக்கி 4. எரேமியா

5. சமுதாய சமத்துவத்தை மதித்து திருமுழுக்கு யோவான் பொதுமக்களுக்கு வழங்கிய அறிவுரை யாது?

1. உங்கள் ஊதியம் போதுமென்றிருங்கள்
2. இரண்டு அங்கிகளை உடையவர்கள் இல்லாதவர்களுக்குப் பகிருங்கள்
3. குறிப்பிடப்பட்ட தொகைக்கு அதிகமாக வரி அறவிடாதீர்கள்
4. எவரையும் அச்சுறுத்தி எதையும் பறிக்காதீர்கள்

6. ஒருவர் தன்னைப் பற்றி அளவுக்கு அதிகமாக மதிப்பீட்டைக் கொண்டிருப்பதில் உள்ள இடரை எடுத்துக்காட்டும் உவமை

1. பரிசேயனும் வரி தண்டுபவனும்
2. செல்வந்தரும் இலாசரும்
3. அறிவற்ற செல்வன்
4. நல்ல சமாரியன் உவமை

7. எசாயா கண்டகாட்சி தொடர்பாக பொருத்தமற்ற கூற்று

1. ஆண்டவர் உயரமான அரியணையில் அமர்ந்திருந்தார்
2. ஆண்டவர் முட்செடி நடுவே காட்சியளித்தார்
3. கடவுளின் தூயதன்மை மூன்று முறை சத்தமிட்டுப் பாடப்பட்டன

4. கடவுளைச் சுற்றி சேராபீன்கள் காணப்பட்டன

8. இறை வேண்டுதலின்படி மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள நாங்கள் செய்ய வேண்டியது

1. மன்னிப்புக் கேட்பவர்களுக்கு மன்னிப்புக் கொடுத்தல் 2. எமக்கு எதிராகக் குற்றம் செய்தவர்களை மன்னித்தல்

3. ஏழு தரம் மன்னிப்பு வழங்குதல் 4. நிபந்தனைகளுடன் மன்னிப்பு வழங்குதல்

9. இயேசுவைப் பற்றிய நற்செய்தியை வானதூதரின் மூலம் பெற்றுக் கொண்டவர்கள்

1. செக்கரியா, மரியா, இடையர்கள். 2. செக்கரியா, எலிசபெத், யோசேப்பு

3. செக்கரியா, யோசேப்பு, சிமியோன். 4. செக்கரியா, சிமியோன், அன்னா

10. பழைய ஏற்பாட்டில் அபிஷேகம் பெற்றவர்களாக கருதப்பட்டவர்கள்

1. குருக்கள், அரசர்கள், மேய்ப்பர்கள். 2. குருக்கள், இறைவாக்கினர், மேய்ப்பர்கள்.

3. குருக்கள், இறைவாக்கினர், அரசர்கள். 4. அரசர்கள், குருக்கள், மேய்ப்பர்கள்

11. செக்கரியாவின் புகழ்பாடலுடன் பொருந்தாத கூற்று

1. இருளிலும் மரணத்திலும் இருப்பவர்கள் ஒளியினைக் காண்பார்கள்

2. முன்னுரைத்த தாவீதின் வழிமரபில் இந்தப் பிறப்பு நடைபெறும்

3. தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் மட்டும் மனம்திரும்பச் செய்யும் பணியில் குமாரன் ஈடுபடுவார்

4. இயேசுவின் பிறப்பின் மூலம் யூதர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும்

12. யூத அறுவடைப் பண்டிகையானது

1. பாஸ்காப் பண்டிகை 2. பெந்தகோஸ்துப் பண்டிகை

3. கூடாரப் பண்டிகை 4. பிரியும் பண்டிகை

13. நசரேத்தூர் அறிக்கையில் காணப்படும் இறையரசு பற்றிய முக்கிய பண்பு

1. நீதியும் நேர்மையும் 2. குணப்படுத்தலும் பராமரித்தலும்

3. நேர்மையும் கருணையும் 4. நீதியும் குணப்படுத்தலும்

14. கொலோசையர் 3:12-17இல் காணப்படும் கிறிஸ்தவ வாழ்வின் கொள்கைகளுக்கு முரணானவை

1. ஞானத்தோடு கற்பித்தல் 2. ஆவிக்குரிய பாடல்களை நன்றியோடு பாடுதல்

3. ஒருவரை ஒருவர் கடிந்து கொள்ளல் 4. ஒருவரை ஒருவர் மன்னித்தல்

15. இயேசுவின் போதனையின் மையப்பொருள்

1. யூத சட்டம் 2. இறையரசு

3. அரசியல் சுதந்திரம் 4. எருசலேம் ஆலயத்தை மீளமைத்தல்

16. அன்று யூத சமுதாயத்தில் பாவிகளாக கருதப்பட்டவர்கள்

1. வரி தண்டுவோர், செல்வந்தர், அடிமைகள்.

2. நோயாளர்கள், குருடர், பொது மக்கள்.

3. இடையர்கள், பெண்கள், யூத ஆண்கள்.

4. வரிதண்டுவோர், பெண்கள், தொழுநோயாளர்கள்

17. ஜெப ஆலயத்தில் இயேசு ஆற்றிய முதலாவது மறை உரையின் தொனிப்பொருள்

1. யூதருக்கு இறையரசு சொந்தமானது 2. புறவினத்தாருக்கு இறையரசு திறக்கப்பட்டுள்ளது

3. இறையரசு தெரிவு செய்யப்பட்டோருக்கு உரியது 4. இறையரசிற்கு மகிமை உண்டாகும்

18. ஏழை விதவையின் காணிக்கையின் மூலம் கிறிஸ்தவர்கள் பெற்றுக் கொள்ளும் படிப்பினை

1. இறைசட்டத்தின்படி செலுத்தி திருப்தி அடைதல் 2. தியாக மனப்பான்மையுடன் செலுத்தி திருப்தி அடைதல்

3. கேட்கப்படும் போது மாத்திரம் செலுத்துதல் 4. எமக்கு வைத்துக் கொண்டு மிகுதியை செலுத்துதல்

19. திருமுழுக்கு யோவான் சுட்டிக்காட்டிய ஏரோது அரசன் செய்த பாவச்செயலாக குறிப்பிடப்படுவது

1. எகிப்தை ஆக்கிரமித்தமை 2. தனது சகோதரியின் மனைவியுடன் தகாத உறவு வைத்திருந்தமை
3. பட்சேபாவை திருமணம் செய்தமை 4. பிற இனப் பெண்ணைத் திருமணம் செய்தமை

20. வறுமையின் சவாலை வெற்றிகொள்ள நாம் செய்ய வேண்டியது

1. வெளிநாட்டவரிடம் பணம் பெறுதல் 2. உழைக்கும் பணத்தை ஆடம்பரமாகச் செலவளித்தல்
3. சோர்வடையாமல் சுறுசுறுப்பாகச் செயற்படுதல் 4. சமூகக் கட்டமைப்பை எமது விருப்பம்போல் மாற்றியமைத்தல்

21. ''நான் யார்? எனச் சொல்லுகிறீர்கள்'' என்ற இயேசுவின் வினாவின் மூலம் எமக்கு வழங்கப்படும் செய்தி

1. இயேசுவுடனான நமது தனிப்பட்ட உறவு முக்கியமானது
2. இயேசுவைப் பற்றிய நல்ல அறிவு வேண்டும் என்பதால்
2. பிரசித்தமாய் இருத்தல் முக்கியமானது
3. பிறரோடு எம்மை ஒப்பிடுதல் முக்கியமானது

22. மன்னிக்க மறுத்த பணியாளர் பற்றிய உவமையின் மூலம் இயேசு நமக்கு விடுக்கும் அறைகூவல்

1. மன்னிப்பதற்கு எப்போதும் முன்வர வேண்டும்
2. நமக்கு எப்போதும் மன்னிப்பு கிடைப்பதற்கு வழிசெய்ய வேண்டும்
3. மன்னிப்புப் பெறவேண்டுமெனில் பிறரை மன்னிக்க வேண்டும்
4. தம் நண்பர்களுக்கு மன்னிப்பளிப்பதற்கு பின்வாங்கக் கூடாது

23. இன்றைய சமூகத்தில் அதிகமாக காணப்படும் ஊனியல்பின் செயல்கள்

1. பரத்தமை, கெட்டநடத்தை, பிறர் அன்பு 2. பில்லி சூனியம், பகைமை, விட்டுக்கொடுத்தல்.
3. குடிவெறி, காமவெறி, களியாட்டம். 4. கீழ்ப்படிவு, பிளவு, பிரிவினை.

24. பவுல் தமஸ்கு நகருக்குச் சென்றதன் நோக்கம்

1. கிறிஸ்தவர்கள் மீது கல்லெறிவதற்கு 2. கூடாரம் அமைப்பதற்கு
3. தொழுகைக் கூடத்தில் போதிப்பதற்கு 4. கிறிஸ்தவர்களை சிறைப் பிடிப்பதற்கு

25. ''ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டிகளை அனுப்புவதுபோல் உங்களை நான் அனுப்புகிறேன்'' என்னும் இயேசுவின் வார்த்தையின் கருத்து

1. தனியாக இருங்கள் என்பதாகும் 2. குழுவாக இருங்கள் என்பதாகும்
3. சவால்களை எதிர் கொள்ளுங்கள் என்பதாகும் 4. பலமாக இருங்கள் என்பதாகும்

26. சிலுவையில் மனம்திரும்பிய கள்வன் மூலம் நாம் கற்றுக் கொள்ளும் படிப்பினை

1. சந்தர்ப்பத்திற்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டும்
2. தப்பித்துக் கொள்வதற்கு வேறு ஏதேனும் ஒருமுறையை பின்பற்றவேண்டும்
3. இறைமன்னிப்பிற்கு எல்லைகிடையாது என்பதை அறிந்து கொள்ளவேண்டும்
4. மரிக்கும் தருணத்தில் மனந்திரும்ப வேண்டும்

27. நல்லாயன் தொடர்பாக காணப்படும் திருவிவிலிய நூல்களில் ஒன்று

1. எசேக்கியேல் 2. விடுதலைப் பயணம் 3. யோபு 4. யோசுவா

28. கிறிஸ்தவ நம்பிக்கையின் அடித்தளமாக அமைவது

1. நம்மைப் பற்றியதாகும் 2. சமுதாயத்தை பற்றியதாகும்
3. இறை சித்தத்தை பற்றியதாகும் 4. உலகத்தை பற்றியதாகும்

29. பவுல் கொரிந்திய சபைக்கு எழுதிய திருமுகத்தில் முக்கியமான அருட்கொடைகளாக எதனை குறிப்பிடுகிறார்

1. இறைவாக்கு உரைத்தல் 2. தர்மம் செய்தல் 3. அன்பு 4. அறிவு

30. தென்னாபிரிக்காவில் வெள்ளை, கறுப்பின மக்கள் மத்தியில் தொடர்பை ஏற்படுத்திய குருவானவர்

1. நெல்சன் மண்டேலா 2. மைக்கல் றொட்றிக்கோ
3. 2ம் யுவாம் பவுல் 4. அருட்பணி மைக்கல் லெப்ஸ்லி

31. கீழ்காணும் கூற்றுகளில் எம்மாவுக்கு பயணம் செய்த சீடர்கள் இயேசுவைப் பற்றிக் கூறிய கூற்று

1. நாம் வழிபடும் இயேசு உயிருள்ளவர்
2. உயிருடன் இருப்பவரை கல்லறையில் தேடுவதேன்
3. ஏன் உள்ளத்தில் ஐயம் கொள்கின்றீர்கள்
4. ஆண்டவர் உண்மையாகவே உயிருடன் எழுப்பப்பட்டார்

32. எசாயா 11:1-9இன் அடிப்படையில் மெசியாவின் சமாதான ஆட்சியில் காணப்படும் பண்புகளில் பொருத்தமானது

1. ஆண்டவருக்கு அஞ்சி நடவாதிருத்தல்
2. கண் கண்டதைக் கொண்டு மட்டும் நீதி வழங்குதல்
3. காதால் கேட்டதைக் கொண்டு மட்டும் தீர்ப்பு செய்தல்
4. வார்த்தை என்னும் கோலினால் கொடியவரை அடித்தல்

33. கடவுளின் தூய்மையையும் மனிதனின் பாவத்தையும் இறைக்காட்சி மூலம் கண்ட இறைவாக்கினர்

1. எரேமியா
2. எசாயா
3. ஓசேயா
4. ஆமோஸ்

34. தலைமைக் குருக்கள் எச்சமயக் குழுவில் இருந்து நியமிக்கப்பட்டனர்

1. பரிசேயர்
2. மறைநூல் அறிஞர்கள்
3. சதுசேயர்கள்
4. லேவியர்கள்

35. ‘‘முழு இஸ்ராயேல் மக்களிடத்திலாவது நான் இவ்வாறான விசுவாசத்தைக் கண்டதில்லை’’ என இயேசுவால் பாராட்டப்பட்டவர்

1. நூற்றுக்கதிபதி
2. கொர்ணலியு
3. யோவான்
4. சீமோன்

36. நன்றி கூறுவதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் புதுமை

1. முடக்குவாதம் குணமடைதல்
2. குருடர் பார்வை பெறுதல்
3. பத்துத் தொழுநோயாளர்கள் குணமடைதல்
4. சூம்பிய கை குணமடைதல்

37. ‘‘செல்வர் ஒருவர் இறையாட்சிக்கு உட்படுவவைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது’’ என இயேசு கூறியது

1. அடிமைத்தன விடுதலை பற்றி
2. சோதனைக் காலம் பற்றி
3. நிலைவாழ்வு பற்றி
4. சுகபோகவாழ்வு பற்றி

38. எம்மாவூருக்குச் சென்ற சீடர்கள் இயேசுவை அறிந்துகொண்ட விதம்

1. அப்பத்தைக் பிட்டுக் கொடுத்த முறையைக் கொண்டு
2. அவரது உரையாடலைக் கொண்டு
3. அவரது முகரூபத்தைக் கொண்டு
4. அவரது உடைகளைக் கொண்டு

39. மதுபோதை குறித்து எச்சரிக்கை தரும் ஞான இலக்கிய நூல்

1. எசாயா
2. சாமுவேல்
3. 1அரசர்கள்
4. நீதிமொழிகள்

40. ஆமோசின் செய்தியிலிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் படிப்பினை யாது?

1. ஏழைகளைப் பணத்திற்கு வாங்கலாம்
2. சமூக நீதியை நிலைநாட்டுவது
3. தீமையை நிலைநாட்ட கடவுள் உதவி செய்வார்
4. அதிகமாக வரி வசூலிப்பது குற்றமல்ல

40x1=40 புள்ளிகள்

**பகுதிII**

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01). 1. நம்பிக்கையினால் இயேவிடம் குணமடைந்த இருவரின் பெயரை தருக?

2. இயேசு தமது சீடர்களை திருப்பணிக்கு அனுப்பியபோது அவர்களுக்கு கொடுத்த அதிகாரங்கள் இரண்டு தருக?

3. இறையரசை அறிவிக்க இயேசு பயன்படுத்திய இரண்டு முறைகளை குறிப்பிடுக?

4. இயேசு பாலைநிலத்தில் சந்தித்த சோதனைகள் இரண்டு தருக?

5. மெசியாவின் வருகையைப் பற்றி எதிர்வு கூறிய இறைவாக்கினர்கள் இருவரின் பெயர்களைத் தருக?

6. இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்பப் பாடுபட்ட அருட்தந்தையர்கள் இருவரின் பெயர்களைத் தருக?

7. துன்புறும் பணியாளனின் பண்புகள் இரண்டு குறிப்பிடுக?

8. பவுலின் முதல் தூதுரைப் பயணத்தின் போது அவருடன் சென்ற இருவரின் பெயர்களை தருக?

9. ஆமோஸ் இறைவாக்கினர் சுட்டிக்காட்டிய அநீதிகள் இரண்டு தருக?

10. இறையரசின் பிரசைகளிடம் காணப்படவேண்டிய குணாதிசயங்கள் இரண்டு தருக? (2x10=20புள்ளிகள்)

02). 1. இறையரசின் கொள்கைகளை விளக்க இயேசு கூறிய உவமைகள் இரண்டு தருக?

2. நாம் இவ் உவமைகள் மூலம் பெற்றுக்கொள்ளும் படிப்பினைகள் மூன்று தருக?

3. இன்றைய கிறிஸ்தவர்கள் உலகில் மக்களுடன் உறவைப் பேணும்போது எவ்வாறு செயல்படவேண்டும் என்பதை இறையரசின் கொள்கைகளின் அடிப்படையில் விளக்குக (2+3+5=10புள்ளிகள்)

03.). 1. நல்ல மேய்ப்பனின் நற்பண்புகள் இரண்டு தருக?

2. நல்லாயன் இயேசுவுக்கு நாம் எவ்வாறு பிரதிநடத்தையை காட்டவேண்டும் என்பதற்கு மூன்று உதாரணங்கள் தருக?

3. இயேசு வெளிப்படுத்திய நல்லாயனுக்குரிய பண்புகள் ஐந்தினைக் குறிப்பிட்டு அதை நீர் எவ்வாறு பின்பற்றுவீர என விளக்குக? 2+3+5=10புள்ளிகள்

04). 1. இறையரசின் பிரசைகளிடமிருந்து இயேசு எதிர்பார்க்கும் விசேட இரண்டு குணாதிசயங்களைத் தருக?

2. இறையரசிற்குரிய குணாதிசயங்களை விளக்குவதற்கு இயேசு கூறிய உவமைகளைக் குறிப்பிடுக.

3. இறையரசின் மக்களிடம் காணப்படவேண்டிய வாழ்க்கை முறையை விளக்குக .

05). 1. பவுலின் முதலாவது பயணத்தின் போது அவர் செய்த அற்புதங்கள் இரண்டு தருக?

2. பவுலின் முதலாவது தூதுரைப் பயணத்தின்போது சாலமி, லீஸ்ரா, பாப்போ நகரங்களின் முக்கிய நிகழ்வுகள் தருக?

3. உமக்கு பாடசாலையில் தலைமைத்துவ பொறுப்பு கிடைக்கப்பெற்றால் பவுலின் தலைமைத்துவ பண்பின் அடிப்படையில் எவ்வாறு நடந்து கொள்வீர் என்பதனை விளக்குக?

06). 1. "ஆண்டவருக்காக வழியை ஆயத்தப்படுத்துங்கள் அவருக்காக பாதையை செம்மையாக்குங்கள்" இது யாரால் யாரைப் பற்றிக் கூறப்பட்டது?

2. திருமுழுக்கு யோவான் அக்கால மக்கள் சமுதாயத்திற்கு கொடுத்த அறிவுரைகள் எவை?

3. திருமுழுக்கு யோவான் கொடுத்த அறிவுரைகள் இன்றைய சமுதாயத்திற்கு சவாலாகும் விதத்தை விளக்குக?

2+3+5=10புள்ளிகள்

07. **விரும்பிய இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக**

1. இயேசுவும் நிக்கதேமுவும்
2. அன்பின் கீதம் (1கொரிந்தியர் 13ஆம் அதிகாரம்)
3. குணப்படுத்துதல்
4. பவுலின் அழைப்பு

2x5=10புள்ளிகள்